பக்கம்.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.106/2017**

**வா.சா. –2–வசந்தா**

**நாள். 18.11.2025**

**வா.சா.2 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தரப்பில் பொதுஅதிகாரம் பெற்ற முகவர் திரு.ஷாஜகான் என்பவர் சாட்சியம் அளித்தார் என்றால் சரிதான். மேற்படி ஷாஜகான் என்பவர் பிரதிவாதியின் சகோதரர் என்றால் சரிதான். பிரதிவாதி யார் மூலமாக அறிமுகமானார் என்றால் எனது கணவர் மூலமாக பிரதிவாதி அறிமுகமானார். கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக வழக்கு சொத்துக்களை பார்த்தேனா என்றால் பார்த்தேன். எந்த தேதியில் போய் பார்த்தேன் என்றால் கிரைய ஒப்பந்தம் செய்தவற்கு 2 மாதங்களுக்கு முன்பு போய் பார்த்தேன். கிரைய ஒப்பந்தம் செய்தவற்கு முன்பு சர்வேயர் மூலமாக சொத்தை அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தானது விவசாயம் நிலம் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண், நான்குமால், விஸ்தீரனம் ஆகியவை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் எந்த தேதியில் ஏற்பட்டது என்றால் 09.01.2013 அன்று ஏற்படுத்தப்பட்டது. மேற்படி கிரைய ஒப்பந்தம் என் முன்னால் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எங்கு வைத்து மேற்படி கிரைய ஒப்பந்த ஆவணம் தயார் செய்யப்பட்ட என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் காலஅவகாசம் எத்தனை வருடம் என்றால் 3 வருடம் ஆகும். மேற்படி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட போது தாவா சொத்தில் வில்லங்கம் இல்லை என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் இந்தியன் வங்கியில் வேலை பார்த்து, 31.03.2011 ஆம் தேதி ஓய்வு பெற்றேன். மேற்படி கிரைய ஒப்பந்த 3 வருட காலஅவகாசம் கொடுக்கப்பட்டு எதற்காக 3 வருட காலஅவகாசம் வழங்கப்பட்டது குறித்து காரணம் எதுவும் கிரைய ஒப்பந்ததில் சொல்லவில்லை என்றால் சரிதான். ரூ.20,000/–க்கு மேல் பணபட்டுவாடா செய்யும் போது காசோலை மூலமாக அல்லது வங்கி மூலமாகவோ தான் கொடுக்க வேண்டும் என்பது எனக்கு தெரியும். கிரைய முன் பணத்தை வங்கி மூலமாக கொடுக்க நான் முயற்சிக்கவில்லை என்றால் சரிதான். கிரைய முன்பணமான ரூ.10,00,000/– கொடுத்த வகைக்கு கிரைய ஒப்பந்தத்தின் போது என்னிடம் ரூ.10,00,000/– இருந்தது என்ற வகைக்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பணிபுரிந்த வங்கி தேசியமயமாகக்கப்பட்ட வங்கி என்றால் சரிதான். தாவா கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட தேதியில் என்னிடம் கிரைய தொகை முழுவது என்னிடம் இருந்தது. கிரைய ஒப்பந்த காலகெடுவான 3 வருட காலத்திற்குள் கிரையம்

எழுதிப்பெறும் வகைக்கு பாக்கி கிரைய தொகையை செலுத்தி கிரையம் எழுதி பெறும் வகைக்கு நடவடிக்கை எதுவும் நான் எடுத்தேனா என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பானது கிரைய ஒப்பந்த காலகெடு முடிந்து ஒன்றரை வருடம் கழித்து தான் நான் அனுப்பினேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் கிரைய ஒப்பந்த காலகெடுவிற்குள் நான் கிரைய எழுதிப்பெற தவறினால் ஒப்பந்த முன்பணத்தை இழந்துவிட வேண்டும் என்று காணப்படுகிறது என்றால் இல்லை. பிரதிவாதி நத்தத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதியின் முழுவிலாசம் எனக்கு தெரியாது. நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த போது கிரைய ஒப்பந்தத்தின் படியான பாக்கி தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். இன்று வரை நான் கிரைய ஒப்பந்தத்தின் படியான பாக்கி தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த பத்திரத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் ஷாஜகான், பாட்ஷா ஆகியோர் கையொப்பம் செய்துள்ளார்கள். கிரைய ஒப்பந்தம் யாரால் தயார் செய்யப்பட்டது என்று கிரைய ஒப்பந்தத்தில் காணப்படவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் தயார் செய்யப்பட்ட காலத்தில் இருந்து தற்போது வரை ஷாஜகான் என் முகவராக இருந்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி ஷாஜகான் என்பவருக்கும் பிரதிவாதிக்கும் சொத்துக்கள் சம்பந்தமாக பல வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் கேள்விப்பட்டுள்ளேன். பிரதிவாதி ஷாஜகான் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்த பத்திரத்தில் ஸ்டாம் பேப்பர் எங்கு வாங்கப்பட்டது என்றால் மதுரையில் வாங்கப்பட்டது. எந்த தேதியில் வாங்கப்பட்டது என்பது எனக்கு நியாபகமில்லை. ஷாஜகான் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளதை படித்து பார்த்தேனா என்றால் படித்துள்ளேன். ஷாஜகான் அவரது சாட்சியத்தில் பிரதிவாதி அவர் மீது குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளதை ஒப்புக்கொண்டுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவரின் சாட்சியத்தை நான் முழுவதும் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தின் போது பிரதிவாதிக்கு செலுத்திய ரூ.10,00,000/—த்தை வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்த்தில் காணப்பட்டுள்ள அட்வான்ஸ் தொகை ரூ.10,00,000/— நான் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்தம் பிரதிவாதிக்கு எனது முகவரான ஷாஜகானுக்கும் முன்விரோதம் இருந்து அதை மனதில் வைத்து நானும் ஷாஜகானும் சேர்ந்து பிரதிவாதிக்கு பாத்திய பட்ட சொத்துக்களை மோசடியாக அபகரிக்க வேண்டும் என்பதற்காக பிரதிவாதிக்கு எதிராக தாவா கிரைய ஒப்பந்தத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஷாஜகானுக்கும் பிரதிவாதிக்கும் முன்விரோதம் இருந்தது வழக்கிற்கு பின்னிட்டு தான் எனக்கு தெரியும். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்கான அசல் ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் உள்ளது. மேற்படி ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களுக்கான ஆவணங்களை பிரதிவாதிக்கு தெரியாமல் ஷாஜகான் என் வசம் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. நான் தாவாவில் சொல்லியிருப்பது போல் பிரதிவாதியிடம் தாவா சொத்துக்களை பொறுத்து கிரையம் முன்பணம் எதுவும் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் பிரதிவாதி என்னிடம் ரூ.5,00,000/- கடன் பெற்றார் என்றும், அந்த தொகையை திருப்பி செலுத்திவிட்டார் என்றும், கடனை செலுத்தியதற்கான ரசீது பிரதிவாதியிடம் உள்ளது என்றும், அதனை மறைத்து நான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தாவா தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN Digitally signed by G SARAN Date: 2025.11.18 17:18:59 +0530

Additional District and Sessions Judge(FAC),

Dindigul.